THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக கொலோசெயர் 3:16

## Joshua



*Preparing to take the lead.*

Deuteronomy 3:28

அக்டோபர் 2009

மரம் 9
கனி 11

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## யோசுவா - Joshua




- மோசேக்கு அடுத்தபடியாக இஸ்ரவேலை வழிநடத்தியவன்
- நூனின் குமாரன் - யோசு.1:1
- கானானை சுற்றிப்பார்த்து மகா நல்லதேசம் என்று இஸ்ரவேலருக்கு எடுத்துரைத்தவன் - எண்.14:7
- எகிப்திலிருந்து புறப்பட்ட 6 லட்சம் பேரில் கானானுக்குள் பிரவேசித்த இருவரில் ஒருவன் - எண்.14:30
- தன் நம்பிக்கையினாலே சூரியனையும், சந்திரனையும் தரித்து நிற்கச் சொன்னவன் - யோசு.10:12
- ஆயிபட்டணத்தின் தோல்விக்கு காரணத்தை கண்டறிந்தவன் - யோசு.7:19
- எரிகோவை வேவுபார்க்க இரண்டுபேரை அனுப்பி வெற்றிகண்டவன் - யோசு.2:1
- அந்நிய தேவர்களை அகற்ற ஆலோசனை கொடுத்தவன் - யோசு.24:23
- நானும் தன் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று உறுதிபூண்டவன் - யோசு.24:15
- நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரணமடைந்தவன் - யோசு.24:29


# கிறிஸ்துவின் வசனம்

## வழங்கும்

## தொலைக்காட்சி நிகழ்ச்சி






தமிழன் *TV* யில் திங்கள் காலை 6.00 - 6.15

இமயம் *TV* யில் புதன் காலை 6.30 - 6.45

*ரேடியோ நிகழ்ச்சி*





இலங்கை ஆசிய சேவை *SW* 25 மற்றும் 41 மீட்டரில்

ஒவ்வொரு சனி மாலை 5.30 முதல் 5.45 மணி வரை

கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**Website: www.thewordofchristindia.com**


"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16


**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 9 அக்டோபர் - 2009 கனி - 11


ஆசிரியருரை

## ஜாக்கிரதையாயிருங்கள்

*Be Serious*



**இ**ச்செய்தியை வாசிக்கிற நீங்கள் நாம் ஏன் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்று நினைப்பீர்கள். பரிசுத்த வேதாகமம் போதிக்கிறது “எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்” என்று போதிக்கிறது (1பேது.4:7). நாம் அநேக காரியங்களில் மிகவும் ஜாக்கிரதை யுள்ளவர்களாயிருக்கிறோம். ஆனால் ஆவிக்குரிய காரியங்களில் மிகவும் மெத்தனமாகவே இருக்கிறோம். காரணம், தேவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கை. இப்படிப்பட்ட நம்பிக்கை இருப்பது நல்லதுதான்.

அதேவேளையில் **எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று** என்று சொல்லப்பட்ட வசனத்தை நாம் கவனிக்கவேண்டும். முடிவு என்று சொல்லும்போது ஒரு காரியத்திற்கு மட்டுமல்ல எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று கர்த்தருடைய வேதம் போதிக்கிறது. எங்குபார்த்தாலும் பூமி அதிர்ச்சிகளும், பேரழிவுகளும் காணப்படுகிறது. மேலும், போல நோவா காலத்தில் நடந்ததுபோலவே நடந்துகொண்டு வருகிறது ஜனங்கள் கொள்வதற்கும் கொடுப்பதற்கும் முக்கியத்துவம் கொடுத்து தேவ பக்தியற்றவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறனர். பிரசங்கி சொல்லுகிறான்: “ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு” என்கிறான் (பிர.3:1). ஒவ்வொரு மனிதனுக்கும் பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு இதை நாம் சிந்திக்கிறோமா? அதைப்போலவே ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. நாம் காண்கிற அனைத்தும் ஒரு நாளில் அழிந்துபோகும் ஆனால் தேவனுடைய வசனமோ என்றும் அழிந்துபோவதில்லை, அந்த அழிந்துபோகாத கர்த்தருடைய வசனத்திற்கு

செவிகொடுங்கள். மனிதன் ஒவ்வொரு நாளும் தன் வாழ்க்கையில் முன்னேற்ற பாதையில் இருக்கப் பிரயாசப்படுகிறான். ஆனால் அவன் மனதுக்கோ திருப்தியில்லை. கர்த்தர் நமக்கு எவ்வளவு பெரிய காரியங்களை செய்திருக்கிறார் என்று எண்ணிப்பார்ப்போமானால் அது சொல்லாலே சொல்லிவிடமுடியாது அவ்வளவு பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்!

ஆண்டவர் இயேசுகிறிஸ்து ஒரு முறை தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார். "கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்" என்று சொல்லத்தொடங்கினார் (மத்.11:21). ஒருவரும் தேவனுக்கு வேண்டாதவர்கள் அல்ல. ஏனெனில் நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் மனந்திரும்பும்படியாக பல சந்தர்ப்பங்களைக் கொடுக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் அநேக அற்புதமான காரியங்களை செய்கிறார். அதையெல்லாம் கண்டும், கேட்டும், பார்த்தும் மனந்திரும்பவில்லையென்றால், அவருக்குத்தான் எத்தனை மனவேதனையாயிருந்திருக்கும் என்று நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு நண்பரே, கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனே, சகோதரியே முடிவு காலத்தில் இருக்கிற நாம் ஜாக்கிரதையுள்ள வர்களாயிருந்து கர்த்தருடைய வேதத்தை ஆராயவும் அதற்கு முக்கியதுவம் கொடுக்கவும். அழிந்துபோகின்ற உலக காரியங்களை வெறுத்து என்றென்றும் அழியாதிருக்கிற வசனத்திற்கு செவிகொடுத்து, அதன்படி, நடக்கும்போது நிலையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம். "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" என்று கர்த்தர் சொல்லுகிறார் (லூக்.21:33). ஆகையால், கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியதுவம் கொடுங்கள். நாம் பார்க்கிற எல்லாமே ஒரு நாள் அழிந்துபோகும். மனிதனுடைய ஆத்துமா என்றுமே அழிந்துபோவதில்லை. அதை பிதாவாகிய தேவன் நமக்குக் கொடுத்தார். அவர் அழியாதவர், "இருக்கிறவராகவே இருக்கிறவர்". அவர் நமக்குக் கொடுத்த ஆத்துமாவும் அழியாதது. இந்த ஆத்துமாவை உண்டாக்கின தேவனுக்கு உன்னை ஒப்புக்கொடுத்துள்ளாயா? அப்படியில்லை என்றால் இன்றே அவருக்கு உன்னை ஒப்புக்கொடு. அவர் ஒருவரே உன்னை இரட்சிக்க வல்லவர்.

வாழ்க்கையில் நாம் எப்பொழுதும் தெளிவானவர்களாயிருக்க பிரயாசப்படவேண்டும். ஏனெனில் அநேகர் தெளிவில்லாமல் காரியங்களை சிறப்பாக செய்யமுடிவதில்லை. பல சமயங்களில் குழப்பமான சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். சிலர் தவறான முடிவு எடுத்துவிடுகின்றனர். ஆகையால் தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருக்க வேதம் நம்மை எச்சரித்து புத்திசொல்லுகிறது.

மத்தேயு எழுதின புத்தகத்தில் 25:9-ம் வசனத்தில் புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளைக் குறித்துப் படிக்கிறோம். "புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள்". மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட அந்தப் பத்து கன்னிகைகளில் ஐந்துபேர் புத்தியாக பதில்சொன்னார்கள். ஒருவேளை அவர்கள் அந்தநேரத்தில் அதை பகிர்ந்து கொடுத்திருப்பார்கள் என்றால் அவர்களும் சென்று இருக்கமுடியாது மற்ற ஐந்து கன்னிகைகளும் சென்று இருக்க முடியாது அல்லவா! இப்படித்தான் சிலவேளைகளில் நாம் ஞானமாக நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். "புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்" என்று நீதி.14:1-ல் படிக்கிறோம். நீங்கள் எப்படிப்பட்ட ஸ்திரீயாக இருக்கிறீர்கள்? புத்தியுள்ள ஸ்திரீகளாக இருந்து உங்களுடைய வீட்டைக் கட்டுங்கள். கர்த்தர் அந்தப் பொறுப்பை உங்களிடம் கொடுத்துள்ளார். ஒரு குடும்பத்திற்கு கணவன் தலையாயிருக்கிறான் (எபே.5:23). மனைவியானவள் அந்தக் குடும்பத்தைக் கட்டி வளர்க்கக்கூடிய பொறுப்புடையவளாயிருக்கிறாள். ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து உங்கள் குடும்பங்களைக் கட்டுங்கள்.

அநேகர் தவறான காரியங்களில் கவனமாக இருப்பார்கள். நாம் நலமான காரியங்களை செய்வதிலும், போதிப்பதிலும், மற்றவர்கள் மத்தியில் சாட்சியாக ஜீவிப்பதிலும் தெளிவானவர்களாயிருக்கவேண்டும். பேதுரு இப்படியாக சொல்லுகிறார்; "உங்களில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவரும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்கிறார் (1பேது.3:15). இந்தவிதமான ஆயத்தம் உங்களில் இருக்கிறதா? நாமே நம்பிக்கையற்றவர்களாக அல்லது கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படும்படியாக நடப்போமென்றால் தெளிவில்லாதவர் களாயிருப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; "அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள், ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்" (ரோம.1:21-24). இன்றைக்கு இவ்விதமாக தேவனால் ஒப்புக்கொடுக்கப்பட்ட அநேகரை பார்க்கிறோம்.

தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்ளாத ஒவ்வொருவனும் இவ்விதமான கேடான சிந்தைக்கு அல்லது அசுத்தத்தை செய்யும்படியாக ஒப்புக்கொடுக்கப்படுகிறான். இச்செய்தியை வாசிக்கிற சகோதரனே, நீ தேவனை அறிந்துள்ளாயா? அல்லது நீ தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தா திருக்கின்றாயா? அவர் உனக்காக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்துள்ளார் என்பதை நீ அறிவாயா? உன்னை தம்மோடு நித்திய நித்தியமாக வைத்துக்கொள்ளும்படியாக தேவன் நித்தியமான வாசஸ்தலத்தை உனக்காக ஏற்படுத்தியிருக்கிறார். நீ அந்த வாசஸ்தலத்தில் பிரவேசிக்க கர்த்தருடைய கட்டளைகளையும் கற்பனைகளையும் கைக்கொள் அது எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது.

**மூன்றாவதாக அந்த வசனத்தில் ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்** என்று வாசிக்கிறோம். அநேகர் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. காரணம் என்னவென்றால், கர்த்தர் நம் தேவைகளை அறிவார் என்று சொல்லுகின்றனர். ஜெபம் நம்மை தேவனிடத்திற்கு வழிநடத்துகிறது. நம்முடைய அநுதின காரியங்களை ஆண்டவர் இயேசுவின் மூலம் தேவசமுகத்திற்கு தெரியப்படுத்துகிறோம். மேலும் ஜெபம் நம்மை பாதுகாப்பு வலையத்திற்குள் கொண்டு செல்கிறது. மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் 26-ம் அதிகாரத்தில் ஆண்டவர் ஜெபிக்கும்படியாக சில சீஷர்களை அழைத்துக்கொண்டு கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்குச் சென்றார். “அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி, சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்”. இன்றைக்கு அநேகருக்கு ஜெபம் என்று சொல்லிவிட்டாலே தூக்கம் வந்துவிடுகிறது. அப்படி வரும்போது அவைகளை ஜெயிக்கவேண்டும். ஒவ்வொரு மணித்துளியும் ஆண்டவர் எவ்வளவாய் நமக்காக பாடுபட்டார் என்று நீங்கள் சிந்திக்கவேண்டும். அவர் தமக்கு வந்த சோதனைகளை ஜெயித்தார். அந்தப்படியாக நாமும் ஜெயிக்கவேண்டும். “சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்” என்று யாக்கோபு சொல்லுகிறார் (யாக்.1:12). சோதனை எல்லோருக்குமே உண்டு. அவைகளை எதிர்கொண்டு சகித்து ஜெயிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். ஆண்டவரோடு ஜெபிக்க சென்ற சீஷர்கள் ஜெபவேளையில் நித்திரை

மயக்கமாயிருந்தார்கள். ஆண்டவர் அவர்களைப் பார்த்து ஒரு மணிநேரமாவது என்னோடு விழித்திருந்து ஜெபிக்கக்கூடாதா என்று கேட்டார். என் அன்பு சகோதரனே, சகோதரியே நீங்கள் ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர் களாயிருக்கிறீர்களா? காலம் கடந்து செல்கிறது. ஒவ்வொரு நாளும் எத்தனையோ மனிதர்கள் சுவிசேஷத்தை அறிந்தும் அதற்கு கீழ்ப்படியாமல் மடிந்துபோய் கொண்டிருக்கிறார்கள். அநேக குடும்பங்கள் பாவப்பிடியில் சிக்குண்டு தவித்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட குடும்பங்கள் காக்கப்பட அவர்கள் இரட்சிக்கப்பட நாம் அநுதினமும் ஜெபத்தில் தரித்திருக்கவேண்டும். ஆண்டவர் இயேசுவை கவனித்துப்பாருங்கள். அவர் தம்முடைய ஊழியத்தில் அதிகமாக ஜெபிக்கிறவராயிருந்தார். அவரால் அநேக அற்புதங்கள் செய்ய முடியும். அவருக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் தம்முடைய பிதாவாகிய தேவனை நோக்கி அவர் ஜெபிக்க தவறவில்லை. அது தேவனுடைய சித்தமாயிருந்தது. ஆகையால் நாமும் தேவனை நோக்கி ஒவ்வொரு நாளும் ஜெபிக்கவேண்டும். நமக்காக ஜெபிக்கிறவர்களாகவே இருக்கக்கூடாது. நம் நாட்டிற்காகவும், உலக மக்களுக்காகவும், சபைவளர்ச்சிக்காகவும், தேவசித்தம் பூமியிலே நிறைவேறவும் ஜெபிக்கவேண்டும். இன்றைக்கு அநேக தேவ தாசர்கள் சுவிசேஷ ஊழியத்தை பல இடங்களில் செய்து கொண்டுவருகிறார்கள். எல்லோருடைய இருதயத்திலும் கர்த்தருடைய வசனம் விதைக்கப்படுகிறது. அதேவேளையில் களைகளும் விதைக்கப்பட்டு வருகிறது. இதை நீங்கள் அறிவீர்களா? விதை விதைக்கிற உவமையில் இதைக்குறித்து நாம் படிக்கிறோம். மத்.13:24-30 வசனங்களில் "பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர்நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து; ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னே அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்; சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்; நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன்; வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான் என்றார்".

மனுஷர் நித்திரை பண்ணுகையில் என்ன நடந்ததுபார்த்தீர்களா? நாமும் ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிராவிட்டால் சத்துரு வந்து களைகளை விதைத்துவிடுவான். ஆகையால் விழிந்திருந்து ஜெபியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# ஏன் இயேசு சிலுவையில் மரித்தார்?
# Why Christ Died On The Cross?

*J.C.Choate*



ஆதியில் தேவன் மனுஷனையும், மனுஷியையும் சிருஷ்டித்தபோது அவர்கள் குற்றமற்றவர்களாகவும் பாவமற்றவர்களாகவும் இருந்தனர். ஆனால் அவர்கள் அந்த பரிசுத்த நிலையில் அதிகநாட்கள் நிலைத்திருக்கவில்லை, சீக்கிரமாகவே அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் ஆவியில் மரித்து, அழகான ஏதேன் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டு, மனுஷன் தன் முகத்தின் வியர்வையால் ஆகாரம் புசிக்கவும், மனுஷி வேதனையோடே பிள்ளை பெறவும், முடிவிலே சரீரத்தில் மரிக்கவும் (ஆதி1-3) இப்படியாக தங்களுடைய பாவத்தின் விளைவினை அனுபவிக்க வேண்டியவனானான். இப்போது மனுஷன் பாவம் தனக்கும் தேவனுக்குமிடையே வந்ததால் தேவனுடைய பகைஞனானான்.

மனுஷன் குற்றமற்ற நிலைக்கு வரும்படி, தானே தன்னை பழைய நிலைக்கு திருப்பிக்கொண்டு வர இயலாதபடியினாலும், அதைப்போலவே மிருக பலி தன் பாவத்தை நிரந்தரமாக நிவர்த்தி செய்ய முடியாதபடியினாலும், உலகத்தின் பாவங்களுக்காக குற்றமற்ற பலியாயிருக்கும்படிக்கும் தேவனுக்கும் மனுஷனுக்கும் மத்தியஸ்தராக ஊழியஞ் செய்யும்படிக்கும் தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பி, இவ்விதமாக மனுஷன் தேவனிடத்திற்கு வர ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தினார் (எபி.10:4; ஆதி3:15). எனவே குறித்த காலத்தில் கன்னிகையாகிய மரியாளுக்குப் பிறக்கும்படி தேவன் தம்முடைய குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். மரியாளுக்கு நியமிக்கப்பட்டிருந்த யோசேப்புக்குக் கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் காணப்பட்டு, "அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு **இயேசு** என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்" (மத்.1:21).

வாக்குரைத்திருந்தபடியும் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தபடியும் இயேசு இவ்வுலகத்தில் வந்தார் என அறிவிக்கப்பட்டிருக்கிறோம். ஆச்சரியம்! ஆனால் தேவன் அவரை மரிக்கும்படிக்கு அனுப்பினார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம்

இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா.3:16-17) என வாசிக்கிறோம். தேவன் அவரை மரிப்பதற்கு மாத்திரம் அனுப்பவில்லை, பாவிகளுக்காகவும், தேவனற்றவர்களுக்காகவும், துன்மார்க்கருக்காகவும் அவர் மரித்தார். "அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோம.5:6-9) என பவுல் சொன்னார். இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, "நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்" (யோவா.15:12-14) என்றார். "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1யோவா.4:9-10) என்று யோவான் எழுதினார்.

கிறிஸ்து பூமியிலே நன்மைசெய்கிறவராகவே சுற்றித்திரிந்தார். அவர் வியாதிகளை சொஸ்தமாக்கினார், குருடருக்குப் பார்வையளித்தார், மரித்தோரை எழுப்பினார், அவர் தேவனிடமிருந்து வந்தவர் என்பதை நிரூபிக்கும்படிக்கு இன்னும் அநேக அற்புதங்களைச் செய்தார். யோவான், "இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா20:30,31) என்றார்.

இயேசு பரிசுத்தமுள்ளவர், அவர் பாவமற்றவர். பவுல் இயேசுவைக்குறித்து பேசுகையில் தேவனைப் பற்றி, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2கொரி.5:21) என்றார். "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை என்று பேதுரு (1பேது.2:22) கூறினார்.

மேலும் நாம், அவர் பாவமற்றவர், நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்த நல்ல மனுஷர், தேவனுடைய ஒரே பேறான குமாரன், உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் என அறிவுறுத்தப்படுகிறோம். பவுல், "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தமும், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்" (பிலி2:8) எனச் சொன்னார். பேதுரு, "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை, அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1பேது.2:21-24) மேலும், கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார் (1கொரி.15டுடு3) என்று பவுல் கூறினார்.

ஆனால் எதற்காக கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார், அதாவது யாரோஒருவன் ஏன் ஒரு நல்ல மனுஷரை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்க விரும்பினான்? இருந்தபோதிலும் அவர் மனிதனை இரட்சிக்கும்படியாகவந்தார் மாறுபட்ட கருத்துடைய பாவம் நிறைந்த மனிதனோடு பேசி சமாளிக்க வேண்டியவராயிருந்திருக்கிறார். தேவனுடைய பிரதிநிதிகளாக வர்ணிக்கப்படுகிற ஆசாரியர், வேதபாரகர், பரிசேயர், சதுசேயர் இன்னும் வேறுசிலர்கூட, மனிதருடைய கற்பனைகள் மற்றும் கட்டளைகளின் பின்னே சென்றார்கள், ஆனபடியினால் அவர்கள் பகை, பொறாமை மற்றும் துன்மார்க்கத்தினால் நிறைந்து காணப்பட்டார்கள். "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" (யோவா.1:11) என அறிவிக்கப்படுகிறோம். மீண்டும் இயேசு, "அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை" (யோவா.5:40) என்றார்.

பெந்தெகொஸ்தே நாளில் கர்த்தருடைய சபை ஸ்தாபிக்கப்பட்ட வேளையில் இந்த மார்க்க வைராக்கியமுள்ள ஜனங்களிடம் பேசுகையில் பேதுரு, "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக் கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். அப்படியிருந்தும், தேவன் நிர்ணயித்திருந்த

ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள். தேவன் அவருடைய மரணஉபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக் கூடாதிருந்தது" (அப்.2:22-24) என்றார். கிறிஸ்து பிலாத்துவினிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டபோது, பொறாமையினாலே பிரதான ஆசாரியர்கள் அவரை ஒப்புக்கொடுத்தார்களென்று பிலாத்து அறிந்திருந்தான் (மாற்.15:9). இவ்வாறாக கிறிஸ்து தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு சிலுவையில் மரிக்க ஒப்புக்கொடுக்கப்பட்டார். துன்மார்க்கரின் கைகளில் அவர் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அடிக்கப்பட்டார், பரியாசம் பண்ணப்பட்டார், சபிக்கப்பட்டார், கொடூர சிலுவையில் ஆணியறையப்பட்டார், இரண்டு கள்ளர்கள் மத்தியில் நிறுத்தப்பட்டு அங்கே மரிக்கும்படி கைவிடப்பட்டார். அதன்பிறகு அவர் கீழே இறக்கப்பட்டு, துணிகளால் சுற்றப்பட்டு, கல்லறையிலே வைக்கப்பட்டு, கல்லறை வாசலில் ஒரு பெரிய கல் புரட்டிவைக்கப்பட்டது. ஆனால் இயேசு தாம் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுவேன் என வாக்களித்திருந்தார். மூன்று நாட்கள் கழித்து இயேசு உயிர்த்தெழுந்த கர்த்தராக கல்லறையிலிருந்து வெளியே வந்தார். மூன்றாம் நாள் காலையில், ஸ்திரீகள் கல்லறையைப் பார்க்கும்படி வந்தபோது, ஒரு தூதன் அவர்களுக்குத் தோன்றி, அவன், "அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்; கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்" (மத்.28:6) என்றான். இயேசு தம்முடைய அப்போஸ்தலருக்குத் தரிசனமான பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒரே வேளையில் தரிசனமானார், அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் ஆட்சி செய்யும்படி மறுபடியும் வானத்திலே பிதாவினிடத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு (1கொரி.15:1-8; அப்.1:1-11) இன்றும் அங்கே வீற்றிருக்கிறார்.

இப்போது மீண்டும், இயேசு சிலுவையில் ஏன் மரித்தார்? அதற்குப் பல காரணங்கள் உண்டு, ஆனால் முக்கிய காரணம் மனிதனை இரட்சிக்கும்படிக்கு மரித்தார் என்பதே உண்மையாகும். ஆனால் கிறிஸ்து அவரது மரணத்தைக் குறித்து சொல்லிய தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றும்படி சிலுவையில் மரித்தார் (கொலோ.2:14,யோவா.1:17, மத்.26:28) மனிதன் தன்னுடைய பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற வேண்டுமென அவர் தம்முடைய இரத்தத்தை சிந்த மரித்தார் (எபே.1:7; அப்.22:16), சபையை ஸ்தாபிக்கும்படி மரித்தார் (எபே.5:25) மேலும் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுக்கும்படி மரித்தார் (2தெச.2:16).


ஆனால் கிறிஸ்து உலகத்தை இரட்சிக்கும்படி சிலுவையில் மரித்தார் என்பது உண்மையாகயிருந்தும், உலகமுழுவதிலும் அநேகர் இழந்தவர்களாக இருக்கின்றனர். ஏன்? இதற்கு பல காரணங்கள் உண்டு. அநேகர் தேவனுடைய சித்தத்தை அறியாதவர்களாக இருக்கின்றனர். பவுல், நான் கிறிஸ்தவனாக

மாறுவதற்கு முன் அறியாமையிலே நான் சபையை துன்பப்படுத்தினேன் என்றார் (1தீமோ.1:13) மற்றவர்கள் தாங்கள் இரட்சிக்கப்படும்படி தங்களில் அல்லது ஒரு சிறந்த நன்னெறி வாழ்வில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். ஆனால் கொர்நேலியும் அவன் வீட்டாரும் நல்ல ஜனங்களாகயிருந்தார்கள், ஆனாலும் இரட்சிக்கப்படும்படி கர்த்தருக்குக் கீழ்ப்படிவது அவர்களுக்கு அவசியமாயிருந்து (அப்.10) தேவனுடைய மகிமையை விட மனுஷருடைய மகிமையை நேசிக்கிறவர்கள் அநேகர் உண்டு. கிறிஸ்து தம்மிடத்தில் விசுவாசமிக்கவர்காளாயிருந்தும் தங்களுடைய நாட்களின் மதத் தலைவர்களால் தாங்கள் புறக்கணிக்கப்படுவோம் என்ற பயத்தினால் தம்மை அறிக்கை பண்ணாதவர்களைக் குறித்து பேசி, பிறகு அவர்கள் ஏன் தம்மை அறிக்கை பண்ணவில்லை என்பதைப் பற்றி விவரிக்கிறார்: “அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாய் விரும்பினார்கள்” (யோவா.12:43). ஆம், இன்றும் இவர்களை போல் அநேகர் உண்டு. அவர்கள் சமயக் காரியங்களில் வஞ்சிக்கப்பட்ட உலக ஜனங்கள். “பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங்கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்” (1யோவா.4:1). கள்ளப்போதகர்கள் அநேகர் இருக்கின்றபடியினால், இப்போதும் கூட, அவர்களால் அநேகர் வழி தவறிப் போகின்றனர். மேலும் கடைசியாக, அநேகர் உலகத்தை நேசித்து, மாம்சத்தின் கிரியைகளில் சந்தோஷமடைகின்றனர். இத்துடன் ஒரே பிரச்சனை என்னவென்றால் கர்த்தர் உலகத்தில் அன்பு கூராதிருங்கள் என்று நமக்கு சொல்லுகிறார் என்பதே. மேலும் மாம்சத்தின் கிரியைகள் மரணத்திற்கு இட்டுச் செல்லும் (கலா.5;ரோம.6:23).

என்னுடைய சிநேகிதரே, நீங்கள் இரட்சிக்கப்படும்படி கிறிஸ்து உங்களுக்காக மரித்தார் என்பதை அறிந்து கொண்டீர்களா? தயவுசெய்து அவரைப் புறக்கணியாதீர்கள் அல்லது இரட்சிக்கப்படும்படிக்கு அவர் ஒருவரே பரிகாரியாயிருக்கும் போது அவரை மறுதலிக்காதீர்கள். மேலும் அவர் ஒருவரே உங்களுக்கு நம்பிக்கை அளிப்பவர். அவரில் நீங்கள் விசுவாசம் வைத்தால், உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, அவரை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அவர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்து கொள்வார். மேலும் நீங்கள் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாய் நிலைத்திருந்தால் ஒரு நாள் அவர் பரலோகத்தில் உங்களுக்கு ஒரு வீட்டை அருளிச்செய்வார் (மாற்.16:16; மத்.10:32; அப்.2:38,47; வெளி.2:10).

**மழை நீரை சேமிப்போம்!**

மழை இல்லையேல் நாடு இல்லை
காடு இல்லையேல் மழை இல்லை
மழை நீரை சேமித்து மகத்தான வாழ்வு பெறுவோம்!



# பார்வையினால் அல்ல

## Not By Sight



நான் வழியை அறியவில்லை, அன்பின் கர்த்தாவே,
நீர் என்னை அழைத்துச் சென்றிருப்பீரென;
இரவில் ஒரு விளக்கும் பிரகாசித்துக்கொண்டிருக்கவில்லை
பாதை காட்டும் அடையாளக்குறியும் இல்லை.

வார்த்தைகளுக்காய் கதறுகிறான் மாம்சமானவன்
தள்ளாடும் பாதங்களை வழிநடத்த;
அவன் அஞ்சுகிறான் ஆழத்தின் அபாயங்களுக்கு,
கவலை, கண்ணீர், தோல்வி.

நடுங்கியகுரலில் உள்ளான மனிதன்
தொடர்ந்து வேண்டுகிறான் கேட்கப்படும்படி;
அவன் வாக்குத்தத்தை அறிகிறான் நீர்
மனிதனுக்காக உண்டாக்கியதை,
அது உம்முடைய வார்த்தையின் வாக்குத்தத்தமே.

அவன் முயற்சிக்கிறான் – ஓ கர்த்தாவே, அவன் முயற்சிக்கிறான்
விசுவாசத்தில் நடக்க எனக்குதவும்படி,
நடக்க வேண்டிய வழியைக் கண்டிப்பாக நான் கற்றுக்கொள்ள எனக்குச் சொல்லும்படி
நான் வழியை அறியாதிருக்கிற போதும்.

மேலும் உள்ளான மனிதனை சூழ்ந்துகொள்ள,
உம்முடைய கண்களையே நோக்கியிருக்கக் கற்றுக்கொள்ள எனக்குதவ,
உம்முடைய வழி நடத்தும் கரத்திற்குக் காத்திருக்க,
உமது அதிகமான பலத்தைக் கேட்கிறேன் கர்த்தாவே நான்

நான் வெளிச்சத்தைக் காண்பேன், நான் வழியை அறிந்து கொள்வேன்
ஒவ்வொரு அடிச்சுவடும் வெளிப்பட்டிருக்கையில்;
தயவுசெய்து கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள எனக்குதவும் கர்த்தாவே,
தயவுசெய்து தள்ளாடும் என ஆத்துமாவை வழிநடத்தும்.

*-Betty Burton Choate*

**சந்தோஷம் என்பது**
**ஒரு ஆரோக்கியமான மனநிலை,**
**ஒரு நன்றியுள்ள குணம்,**
**ஒரு தெளிவான மனசாட்சி,**
**ஒரு அன்பு நிறைந்த இருதயம்.**

# அற்பமாய் எண்ணாதிருங்கள்
## Despise Not

*J.Glory Arjunan*

இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, நீ தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கு ஏற்றவைகளைக் குறித்தும் அற்பமாய் எண்ணி, நவநாகரீக வாழ்வில் மோகங்கொண்டு உன் நாட்களைக் கழிக்கின்றாயா? இன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிருக்குமானால் நீ எங்கே செல்லுவாய்? அற்மாக எண்ணி ஒதுக்கப்பட வேண்டிய இவ்வுலக வாழ்வை மேன்மையாக எண்ணி மேன்மையான இரட்சிப்பைக் குறித்து அற்பமாக எண்ணிக்கொண்டிருப்பாயானால் உன் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாக மாறிவிடும்.

அன்று, நமது ஆதித்தாயாகிய ஏவாள் பாவஞ்செய்து தேவனுடைய மகிமையை இழந்தாள். அதனிமித்தம் நாமெல்லோரும் தேவ மகிமையை இழந்தோம். இழந்துபோன மகிமையை தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட அனைவருக்கும் கொடுக்கவே இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்......." (1தீமோ.1:15) என்றும், "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி," (ரோம.3:23) என்றும் பரிசுத்த வேதம் கூறுகிறது. ஆனால் இன்று அநேக சகோதரிகள் நான் ஒரு பாவமும் செய்யவில்லை, என் பிள்ளைகளும், என் குடும்பம் முழுவதும் ஒரு பாவமும் செய்யவில்லை. தானதர்மங்கள் ஏராளமாய் செய்கிறோம், மற்றவர்களுக்கு எந்ததீங்கும் செய்யாது வாழ்கிறோம் கடவுளுடைய ஆசீர்வாதத்தினால் எந்த குறைவுமின்றி வாழ்கிறோம். இப்படியிருக்க நாங்கள் எவ்வாறு பாவிகள் ஆவோம், எங்களுக்கு இயேவின் இரட்சிப்பு எதற்கு? என்கின்றனர். அதுமாத்திரமல்ல, வேத வசனங்களை விளக்கிக் கூற முற்படும் போது அதை அசட்டை செய்து அற்பமாய் எண்ணவும் செய்கின்றனர்.

அன்பு சகோதரியே, நீயும் இவ்வாறு தான் எண்ணுகிறாயா? உலக சம்பத்துக்களை குறைவில்லாமல் பெற்று மேன்மைபாராட்டிக் கொண்டு வாழும் ஜனங்களை நோக்கி, "உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகள்ளயும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவை களையும், தேவன் தெரிந்து கொண்டார்" (1கொரி.1:28) என்று வேதம் கூறுகிறது. ஆம் தேவன், இழிவாகவும் அற்பமாகவும் எண்ணப்பட்டவர்கள் மூலமாய் தம்முடைய குமாரனின் ராஜ்யத்திற்குள் அநேகரை கொண்டுவந்து சேர்த்துக் கொண்டேயிருக்கிறார்.

அன்று, தேவன் இஸ்ரவேல் தேசத்திலிருந்து சிறைபிடித்து கொண்டு செல்லப்பட்ட ஒரு சிறுபெண்ணின் மூலம் ராஜாவின் படைத்தலைவனும், அதிக எண்ணிக்கையுள்ள மக்கள் செல்வாக்கினைக் கொண்டிருந்த ஒரு பெரிய மனுஷனுமாயிருந்த நாகமான் என்பவனுக்கு நற்செய்தியை அனுப்பினார். அந்த சிறுபெண் சீரியா தேசத்தில் இவனுடைய வீட்டில் வேலை செய்து வந்த ஒரு பணிவிடைக்காரி,

அதாவது ஒரு வேலைக்காரி. அற்பமாய் எண்ணப்பட வேண்டிய இவள் தன் எஜமானாகிய இந்த மனுஷனுக்கு இருந்த குஷ்டரோகம் குணமாக ஒரு நற்செய்தி அறிவிக்கிறாள்"...... அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அவள் தன் நாச்சியாரைப் பார்த்து என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்" (2இராஜ.5:2,3).

அன்பு சகோதரியே, அவளுடைய எஜமாட்டி ஒரு வேலைக்காரியின் சொல்லைக் கேட்டு செயல்படுவதை இழிவாக அல்லது அற்பமாக எண்ணினாளா? அவ்வாறு எண்ணியிருப்பாளேயானால் நிச்சயம் தன் புருஷனுக்கு சுகத்தினைப் பெற்றிருக்கமாட்டாள். குஷ்டரோகம் என்ற அந்த வியாதி அன்றைய நாட்களில் தீட்டாக எண்ணப்பட்டு பெரிய வியாதியாகக் கருதப்பட்டது இன்றைய நாட்களில் ஜனங்களைப் பிடித்துள்ள மிகப்பெரிய வியாதி பாவம் என்றவியாதி! ஆம், எவ்வாறு குஷ்டரோகம் அன்று அருவருக்கப்பட்டதோ, அதைக் காட்டிலும் மிக அருவருப்பான பாவவியாதி மக்களை பிடித்துக் கொண்டிருக்கிறது. ஒருவேளை வெளிப்படையாக நீ ஒரு பாவமும் செய்யவில்லையென்பாயாகில், இதோ, இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும் சில பாவங்கள் மனுஷனைத் தீட்டுப் படுத்துமே. "எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங் களும் .......மனுஷனைத் தீட்டுப்படுத்தும்......" என்றார் (மத்.15:19) இயேசு கிறிஸ்து. இவைகளில் ஏதாவது உன்னிடத்தில் உண்டா? என்று சோதித்துப் பார். அன்று அந்த அடிமைப்பெண் தேவனுடைய தீர்க்கதரிசியினிடத்திற்கு நேராக தன் எஜமானை வழிநடத்தினாள். இதை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரியே, நான் தீர்க்கதரிசியிலும் பெரியவரும் மேன்மையுள்ளவருமாகிய இயேசுவினிடத்திற்கு நேராக உன்னை வழிநடத்துகிறேன். இயேசுவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கிசுத்திகரிக்கும். உன்னை குணமாக்கும். சத்தியத்தை சத்தியமாய் போதிக்கும் போதகத்தையோ போதகரையோ அற்பமாய் எண்ணி இரட்சிப்பை இழந்து விடாதே. "மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்" (நீதி.1:7) என வேதம் கூறுகிறது. உலக ஞானத்தில் சிறந்து விளங்கும் ஒரு நபர் தெய்வஞானத்தை அசட்டை செய்யும் போது அவர்கள் தேவனுடைய பார்வையில் மூடரைப் போல்தான் இருக்கின்றனர். "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்....." (1கொரி.1:27). சில வேளைகளில் நமக்குள் இருக்கும் சிறப்பான அறிவுக்கேற்ற காரியங்களை எண்ணி பெருமிதம் கொள்ளும்போதும் உலகப் பொருட்களை நாடி தேவனைப் புறக்கணிக்கும் போதும் தேவன் அற்பமானவைகளைக் கொண்டு நமக்குப் போதிக்க முற்படுகிறார். அன்று பிலேயாம் என்ற தீர்க்கதரிசிக்கு அற்பமான கழுதையைக் கொண்டு போதித்தார். மேலும் அற்பமாக எண்ணப்படுகிற ஆகாயத்துப் பறவைகள், மற்றும் காட்டுப் புஷ்பங்கள்

போன்றவைகளிடமிருந்தும் போதனையைப் பெற அவைகளைக் கவனித்துப் பாருங்கள் என்று இயேசு சொல்கிறார்.

கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுகிற அநேக ஸ்திரீகளும் கூட தங்களுடைய பாரம்பரிய கட்டுகளால் கட்டப்பட்டு சத்தியத்தை அறிந்துகொள்ள மனதில்லாதிருக்கிறார்கள். தாங்கள் மாத்திரமல்ல தங்கள் குடும்பத்தாரையும் சத்தியத்தை அறிந்து கீழ்ப்படிய அனுமதிக்கிறதில்லை. அநேகக் குடும்பங்களில் ஸ்திரீகளுடைய ஆளுகை தான் காணப்படுகிறது. தங்களுடைய புருஷர்களின் விசுவாசத்திற்குக் கூட தடையாயிருப்பவர்களும் உண்டு. யோபுவின் மனைவியுங்கூட தன் புருஷனுடைய விசுவாசத்தைக் குறித்து அற்பமாய் எண்ணி, 'தேவனை தூஷித்து ஜீவனை விடு என்றாள்'. இப்பேர்ப்பட்டவர்களைக் குறித்து, "..நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்" (லூக்.11:32) என்று வேதம் கூறுகிறது.

சகோதரியே, அன்று எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் இஸ்ரவேலில் அநேக குஷ்டரோகிகள் இருந்தார்கள். ஆயினும் சீரியதேசத்தானாகிய நாகமானே அல்லாமல் வேறொருவனும் சுத்தமாக்கப்பட வில்லை (லூக்.4:27). அப்படியானால் தேவனுடைய சொந்த ஜனமாகிய இஸ்ரவேலில் இருந்த குஷ்டரோகிகள் கூட சுகமாக்கப்படவில்லை என்று தானே பொருள். ஆனால் புறதேசத்தானாகிய நாகமானுக்கு சுகம் கிடைத்தது. ஆம், நான் கிறிஸ்தவள், நான் பக்தியுள்ளவள், பல ஆண்டுகளாக சபையில் அங்கம் வகிக்கிறவள், சிறுவர்பள்ளி நடத்தி வருகிறவள், அவ்வப்போது ஊழியம் செய்து கொண்டு வருகிறவள் என்று சொல்லி சத்தியத்தின் படி நடவாமல் உங்களுக்குள்ளே திருப்தியடைந்து வருகிறீர்களா? ஏமாந்து போகாதீர்கள். இம்மைக்குரிய ஆசீர்வாதங்களையே எதிர்நோக்கி, அதை அவ்வப்போது பெற்று அனுபவிப்பதனால் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குட்பட்டவர்கள் என்று ஆகாது.

சத்தியத்தை பகுத்துப்படியுங்கள். வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, பூமிக்குரியவைகளையல்ல நித்தியத்திற்குரியவைகளைக் கண்டு கொள்ளுங்கள். அன்று நாகமானுக்குக் கிடைத்த நற்செய்தி இதைவாசிக்கும் உனக்கு இன்று கிடைத்துள்ளது. இழந்து போன ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், என்றென்றும் அவரோடு கூட உறவாடிக் கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களையும் மீண்டும் பெற இயேசுவினிடத்திற்கு வா. கிறிஸ்தவரல்லாத உனக்கு இயேசு தேவை, கிறிஸ்தவர்கள் என்று வெறுமனே எண்ணிக்கொண்டிருக்கிற உனக்கும் இயேசு தேவை. இன்றே இயேசுவை அறிய வேண்டிய பிரகாரம் அறிந்து, அவரை விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். சத்திய ஆவியானவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் அவருடைய வசனத்தின்படிநடத்திச் செல்வார். நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தைப் பெறுவீர். தேவனுடைய ராஜ்யத்தைக்

குறித்தும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கேற்றவைகளைக் குறித்தும் அறிய விரும்புகிற உங்களுக்கு உதவிசெய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறோம். தேவன் தாமே உங்களை வழி நடத்துவாராக!


## மன்னிக்கப்படாத பாவம்

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; எந்தப் பாவமும் எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும்; ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை" (மத்.12:31,32) -இயேசு

## பொது அறிவுச் சோதனை

1. இந்தியாவில் ரேடியோ ஒலிபரப்பு தொடங்கப்பட்ட ஆண்டு எது?
   அ)1926 ஆ)1925 இ)1927
2. கண்ணின் மீச்சிறு தொலை தூரம் எவ்வளவு?
   அ)0.50 செ.மீ ஆ)0.20 செ.மீ இ)0.25 செ.மீ
3. அக்குபஞ்சர் முறையைக் கண்டு பிடித்த நாடு எது?
   அ)சீனா ஆ)இந்தியா இ)ஜப்பான்
4. போலியோ நோயை தடுக்கும் வழிமுறையை கண்டறிந்தவர் யார்?
   அ)ஜோன்ஸ் சாக் ஆ)எட்வின் ஹபின் இ)ராபர்ட் மிலிகன்
5. இந்தியாவில் ஆங்கிலேயர்களால் நிர்மானிக்கப்பட்ட முதல் துறைமுகம் எது?
   அ)சூரத் ஆ)கொல்கத்தா இ)மும்பை

விடைகள்: 1.1927 2.0.20 செ.மீ 3.சீனா 4.ஜோனஸ் சாக் 5.சூரத்



நீங்கள் சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதியில் இருக்க நேர்ந்தால் தின்னப்பட்டி கிறிஸ்துவின் சபையாரோடு கலந்து கொண்டு தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்கள்.


உங்களை அன்புடன் வரவேற்கும் சபை ஊழியர் மற்றும் சபையார்.

சகோ.சிவக்குமார், ஊழியர் கிறிஸ்துவின் சபை, தின்னப்பட்டி, ஓமலூர் தாலுகா, சேலம் மாவட்டம்.

# நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேபிப்போம்

# As For Me And My House, We Will Serve The LORD

**S.DAVID MARTIN, CHURCH OF CHRIST,**
**NO.75Thirunavakarasu St.,Perambur,**
**CHENNAI -600 011 Mobail:9840425080**



மோசேக்குப் பின் வழி நடத்திக் கொண்டு வந்த யோசுவா அந்த இஸ்ரவேல் மக்களைப் பார்த்து நீங்கள் யாரை சேவிக்கப் போகிறீர்கள்? என்கிறார்.

கர்த்தரை சேவிக்கிறது... ஆகாததாய்க் கண்டால்... நதிக்கு அப்புறத்திலுள்ள உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம் பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களை சேவிப்பீர்களோ? என்று மேற்கண்ட இரண்டு கேள்விகளைக் கேட்ட யோசுவா சொல்கிறான்

**"நானும் என் வீட்டாருமோ வென்றால், கர்த்தரையே சேவிப்போம்"**... யோசுவா இந்தக் கேள்வியை கேட்டதின் மிக முக்கியமான காரணம், இந்த இஸ்ரவேல் மக்கள் வனாந்திரத்தில் மோசேயினால் வழி நடத்தப்பட்டு வரும் போது அவர்கள் அநேக அற்புதங்களை கண்டிருந்தும் அதிக சமயங்களில் தேவனிடத்தில் அவர்கள் பிரியமாய் இருந்ததில்லை.

கானானுக்கு வந்தபின்னும் அவர்கள் இஸ்ரவேலின் தேவனைத் தேடாமல் அவர்கள் சோரமார்க்கமாய் போனார்கள்.

நாம் கர்த்தரை சேவிக்கிற குடும்பமாய் இருக்க வேண்டுமானால் முதலாவது நமது பிள்ளைகளை சிறுபிராயம் முதல் கர்த்தருடைய வழியில் நடத்த வேண்டும் (நீதி.22:6,உபா.6:7). மேலும் ஆதி.22:7-ன்படி, ஆபிரகாம் தன் மகனாகிய ஈசாக்குடன் பலியிடப்படும் மோரியா தேசத்தில் தேவன் குறிப்பிட்ட ஒரு மலையில் பலியிடும்படியாக போகும்போது ஈசாக்கு தன் தகப்பனை நோக்கி பலியிடுவதற்கான ஆடு எங்கே? என்கிற கேள்வியை எழுப்புகிறான். இதை நாம் உற்று நோக்கும் போது நாம் அறிந்து கொள்ளக்கூடிய காரியம் என்னவென்றால், ஈசாக்கு தன் தகப்பனாகிய ஆபிரகாம் பலியிடும் வேளைகளிலெல்லாம் அவன் உடன் சென்று பலியிடும் முறைமையை அறிந்தவனாய் காணப்பட்டான். மேலும் தன் மகனை பலியிடும் படியாய் பலிபீடத்தின் மேல் கட்டி கிடத்தியபோதும் அவன் வாய்திறவாதிருந்தான் ஆதி.22:8,9.

இதே விதமான கீழ்ப்படிதலை புதிய ஏற்பாடும் நமக்கு விளக்குகிறது.

தீமோத்தேயுவின் தகப்பன் ஒரு கிரேக்கன் அவனுடைய தாய் ஒரு விசுவாசமுள்ள யூத ஸ்திரீ (அப்.16:1). இந்த விசுவாசத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்கும்போது 2தீமோ.1:1,2 வசனத்தின்படி மேலான விசுவாசத்தை தீமோத்தேயு உடையவனாக இருந்தபடியால் அவனை பவுல் "பிரியமுள்ள குமாரன்" என்று குறிப்பிட்டு ஒரு நிருபத்தை எழுதும்படி துவங்குகிறார். தீமோத்தேயுவுக்குள் இருந்த விசுவாசத்தின் ஆணிவேர் அவன்பாட்டியாகிய லோவிசாளுடனும், அவன் தாயாகிய ஐனிக்கேயாளிடமும் இருந்தது (2தீமோ.1:5).

மேற்கண்ட சம்பவத்தின் மூலம் நாம் கற்றுக் கொண்ட இரண்டு காரியங்கள்.

1. நம்முடைய பிள்ளைகளை சபையின் காரியங்கள் எல்லாவற்றிற்கும் அழைத்து செல்ல வேண்டும்.

2. அவர்களை கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் வளர்க்க வேண்டும்.

இதே போன்ற விசுவாசமும, கீழ்ப்படிதலும் நமக்கும் நம்பிள்ளைகளுக்கும் அவசியம்.

> இவ்விதமான சீரைப்பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது; கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது – சங்கீதம் 144:15





**2010–ம் வருட காலண்டர் தேவைக்கு**
**தொடர்பு கொள்ளவும்**
உங்களுடைய சபை தொழுகை விவரம்மற்றும்
மூகவரியுடன்அச்சிட்டு கொடுக்கப்படும்
தொடர்புக்கு
**S.David Martin - 98404 25080**




நாட்டுச் செய்திகள்

✡ கோவையில் ஜனவரி மாதம் நடக்க இருந்த உலக தமிழ் மாநாடு தள்ளி வவைப்பு.

✡ பொது இடங்களை ஆக்கிரமித்து புதிய வழிபாட்டு தலங்கள் கட்டக்கூடாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

✡ வீடு, கடை, அலுவலகத்தை இருந்த இடத்தில் செல்போனில் பார்க்கலாம் அதி நவீன கேமரா சென்னையில் அறிமுகம்.

✡ சிறிய கார் உற்பத்தியில் இந்தியாவுக்கு இரண்டாம் இடம்.

✡ இந்தியாவிடம் இருப்பதைவிட சீனாவிடம் 3 மடங்கு போர் விமானங்கள்.

## மணமகன் தேவை

1. 25வயதுள்ள B.Com.,தனியாரில் பணிபுரியும் தொடர்பு சகோ.செங்கோல்ராயன் ஊழியர் பாண்டிச்சேரி 9245715947

2. 30 வயது B.Sc.,(Chem) HDCA (Comp)கணிணி ஆசிரியை, பெரம்பூர் சகோ.ஜெபகுமார் 9385500883

3. 23 வயது BBA படித்து பெங்களூரில் பணிபுரியும் தொடர்பு சகோ.சில்ஸ்பீ, ஊழியர் புதுக்கோட்டை 9894716585

4. 22 வயது +2 படித்து செவிலியர் 1வருடம் புடித்த தொடர்பு சகோ.சாமுயல்ராஜ், ஊழியர் சத்தியமங்கலம் 9865161589

## மணமகள் தேவை

1. 38 வயது HSCபடித்த மஹாராஷ்ட்ரிய கிறிஸ்துவ மணமகனுக்கு தொடர்பு ஊழியர் மும்பை 09869191425

2. 27 வயது B.A., மெயின்டனன்ஸ் சூப்பர்வைசர் மற்றும் சொந்த தொழில் சகோ.சுந்தரராஜ் ஊழியர் பழையவண்ணாரப்பேட்டை 9884831688

3. 27 வயது B.E படித்து சென்னையில் வியாபாரம் செய்யும் சகோ.ஆல்பர்ட் சங்கர் 9962593031

4. 24 வயது B.Sc., ஹொட்டல் மானேஜ்மென்ட் சூப்பர்வைசர் சகோ.ஜெபக்குமார் ஊழியர் குமரன் நகர்,சென்னை9385500883

## வேத அறிவுப்போட்டி எண் 109 -ல் வெற்றிபெற்றவர்கள்

N. ஜான் செல்லைய்யா-நியூ எல்லீஸ்நகர்
A. ஆனந்த் -மதுரை
S. சாந்தா சாமுவேல்-ஊதியூர்
M. ஏஞ்சல் -பெருந்துறை
J. ஐசக் -திருநெல்வேலி
Mrs. மெர்ஸி டக்லஸ்-கோவை
Tmt. மரகதம் திரவியம்-கோம்பை
Mrs. எலியாம்மா-கடலூர்
V.F. ஷர்லோ - பாண்டி
S. பாக்கியராஜ் -திண்டுக்கல்
Mrs. மெல்சிடா-திண்டுக்கல்
K. ஜான் - களக்காடு
K.M. ஜான் - ஜெயங்கொண்டம்
Mrs.C. ஜாய் கிறிஸ்டினா - நாகமலை
G.பூங்கோதை - கோபி
Mr.E. ஜோசப் தேவதாஸ் - நாகமலை
Mr. இவான் லெண்டில் பாண்டியன்-மறவமங்கலம்
K.M. சாந்தி -வாடிப்பட்டி
Mr. ஜேபெஃர்சன் எட்பெர்க் பாண்டியன்-காளையார்கோவில்
J. நிர்மலாஜான் -மதுரை
V. கோவலன் -மதுரை

### வேத அறிவுப்போட்டி எண் 109 -ன் விடைகள்

1. வார்ப்பித்த விக்கிரகம் - எரே 51:18
2. ஆம் -மாற் 6:56
3. உன் தேவன் -ஏசா 66:9
4. பவுல் -அப் 20:21
5. இருளின் -பிர 11:8
6. ஆராயப்படாதவைகள் - ரோ 11:33
7. விலையுயர்ந்தஇரத்தினம் - நீதி 20:15
8. ஆம் -1கொ 6:2
9. காக்கிறார் -சங் 116:6
10. கொரிந்து சபைக்கு-2கொ 10:3

# The 1St World Evangelism Retreat
# KODAIKANAL



"இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்"
சங்கீதம் 118:24

கடந்த 27,28,29,30 செப்டம்பர் 2009-ல் 60 பேர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர்

## ஜெபியுங்கள்

- ✧ 27,28,29,மற்றும் 30 தேதிகளில் கொடைக்கானலில் நடைபெற்ற சுவிசேஷகூட்டத்திற்க்காகவும் மற்றும் Retreat-க்காக...
- ✧ 27-ம்தேதி ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்த லெட்சுமிக்காக...
- ✧ 30-ம் தேதி சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த மூன்று நபர்களுக்காக...
- ✧ 2500 வாசகர்களுக்காக...
- ✧ ஜெர்ரிபேட்ஸ் சுவிசேஷ பயணத்திற்காக...



## எதை நீங்கள் கட்டுப்படுத்த முடியும்?
## What Can you Control?

❋நீங்கள் கட்டுப்படுத்த முடியாது உங்கள் ஜீவியத்தின் முடிவை
ஆனால் நீங்கள் கட்டுப்படுத்த முடியும் அதனுடைய அகலத்தையும் ஆழத்தையும்.

❋நீங்கள் கட்டுப்படுத்த முடியாது உங்களுடைய முகத்தின் உருவத்தினை-
ஆனால் நீங்கள் கட்டுப்படுத்த முடியும் உங்களுடைய முகக்குறியினை.
நீங்கள் கட்டுப்படுத்த முடியாது சீதோஷ்ணநிலையை-
ஆனால் நீங்கள் கட்டுப்படுத்த முடியும் உங்களுடைய மனதின் சூழ்நிலையை
ஏன் நீங்கள் கவலைப்படுகிறீர்கள் நீங்கள் கட்டுப்படுத்த முடியாத காரியங்களைக் குறித்து,
உங்களை சார்ந்திருக்கிறவற்றினை நீங்கள் கட்டுப்படுத்துவதில் உற்சாகமாய் உங்களை எப்போது ஈடுபடுத்துவீர்களா?

# மனந்திரும்புதல் - Repentance



**R.FERNANDAS,** Evangelist
CHURCH OF CHRIST, Veppilaipatti
Kethuraddy patti - 635 302,
**DHARMAPURI DT** Mobile:9788319730

இன்றைக்கு உலகத்தில் மனிதன் தன்னை படைத்த உண்மையான தேவனை மறந்து பல்வேறு வழிகளில் பாவத்தை செய்து கொண்டிருக்கிறான். தான் கடினமாக உழைத்து சம்பாதித்த பணத்தை, மதுபானத்திற்கும், விபச்சாரத்திற்கும், வேசித்தனத்திற்கும் செலவு செய்து தன்னைத்தான் அழித்துக்கொள்கிறான்

உலகத்தில் நாம் பணம், நிலம், புகழ், பொன், பொருள் இவைகளை எல்லாம் இழந்தாலும் மீண்டும் சம்பாதித்து விடலாம். ஆனால் உங்களுடைய ஆத்துமாவை இழந்து விட்டால் மீண்டும் சம்பாதிக்க இயலாது. ஆகையால் இயேசுவிடம் உங்களையும் உங்கள் ஆத்துமாவையும் ஒப்புக்கொடுங்கள். அவர் உங்கள் ஆத்துமாவை இரட்சிக்க வல்லவர். இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே இயேசு உலகத்திற்கு வந்தார்.

ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். இவர்களில் சிறியவன் தன் தகப்பனை நோக்கி, ஆஸ்தியில் தனக்கு வரும் பங்கை பங்கிட்டுகொடுக்கும்படி கூறினான். தகப்பனும் சொத்தில் பாதியை மூத்தவனுக்கும் பாதியை இளையவனுக்கும் பங்கிட்டு கொடுத்தார். சிறிது நாட்கள் கழித்து இளையவன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு தூரதேசத்திற்குப்போய் அங்கு தகாதவிதமாய் அதாவது மதுபானத்திற்கும், விபசாரத்திற்கும் பணத்தை செலவு செய்தான்.

கையில் பணம் தீர்ந்த பின்பு அந்த பட்டணத்தில் ஒரு பெரிய மனுஷனிடத்தில் போய் சேர்ந்தான். அவன் அங்கு பன்றி மேய்ப்பவனாகவும், நேரத்திற்கு நேரம், சாப்பாடு கிடைக்காமல் பன்றி சாப்பிடுகின்ற தவிட்டினாலே தன் பசியை போக்க நினைத்தான் ஆனால் அந்த தவிடு கூட அவனுக்குக் கிடைக்கவில்லை. அப்பொழுது அவன் மனந்தெளிந்து தன் தகப்பனிடத்தில் உள்ள கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். என்னுடைய தவறான சிந்தனையினால் பாவமான வழிகளில் செலவழித்து என் தகப்பனுக்கும், ஆண்டவனுக்கும், துரோகம் செய்துவிட்டேன் என்று உணர்ந்து, மனந்திரும்பினான். பின்பு தன் தகப்பனிடம் சென்றான். அவன் தகப்பன் அவனை ஏற்றுக்கொண்டு அவனுக்கு விருந்து செய்தான்.

என் நண்பர்களே இன்றைக்கும் எத்தனையோ பேர் விபசாரத்திற்காகவும், குடிப்பழக்கத்திற்காவும், நிலத்தையும், வீட்டையும், குடும்பத்தையும் இழந்தவர்களாயிருக்கிறார்கள். அநேக இளைஞர்கள் மதுபானத்திற்கும், விபசாரத்திற்கும் அடிமைகளாகி உண்மை இரட்சகரை தேடாமல் பாவத்தை தண்ணீரைப்போல பருகி நரகத்தை நோக்கி பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில் நீங்கள் ஒருவராக இருக்கலாம். இன்றே, மனந்திரும்பி ஆண்டவர் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது மெய்யான வாழ்வைப் பெற்றுக்கொள்வீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம். நீங்கள் தர்மபுரி வந்தால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவ காத்திருக்கிறோம்.


சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -21

## தேவனின் பிள்ளைகள் - Children of God

**Bro. John S.Nathan,** Gospel Minister,
Christian City Church of Christ, Minjur -601 203, S.INDIA.
Mobile: 94444 43378

### நீர் தேவனுடைய வார்த்தையினாலே பிறந்த அவரின் "உயிரின் உயிர்"



ஒன்றான மெய்த்தேவனைப்பற்றி கேட்டிராத, விசுவாசிக்காத உலகின் கோடிக்கணக்கான மக்களினம் தங்களை **தேவனுடைய பிள்ளைகள்** என எவ்விதமான ஆதாரமும், உரிமையும், உறவுமின்றி அழைத்துக்கொள்கிறார்கள். பல மத பற்றுடையோர் கூட அவர்களின் மந்திர, தந்திர பேச்சாலும், செய்கையாலும் தங்களை கடவுள் சிறப்பாக படைத்தார் என்று கூறி பெருமையடைந்து, தங்களை மிகவும் உயர்ந்தவர்கள் என்றும், தாங்கள் தான் மக்களை ஆளவும், கல்வி கற்கவும், உயர்பதவிகளை வகிக்கவும் தகுதிபெற்றவர்கள் என்று கூறியும் அதே நேரத்தில் மற்றவர்களை, எளியவர்களாகவும், தாழ்ந்தவர்களாகவும் கருதி, அவர்கள் தங்களைப்போல் நல்ல நிலையில் வாழ தகுதியற்றவர்கள் என்றும், அவர்களை தங்களின் சுய, சகவாழ்விற்கு கடமையாற்றிடவும் தேவனுக்கு எல்ல சேவைகளையும் அவர்களும், அவரின் பெண்ணுகளும்கூட கடமைப்பட்டவர்கள் என்று இன்றும் உள்ள மதத்தலைவர்கள் கூறிவருகிறார்கள். பெண்ணினம் அடிமைபடுத்தப்பட்டது, வேற்றுமைபடுத்தப்பட்டது, அவமானப்படுத்தப்பட்டது. ஆனால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இவ்வாறு மனித இனம் சீர்குலைந்து சின்னாபின்னமாக்கப்படுவார்கள் என்பதை எச்சரிக்கும் விதமாக மக்களிடையே வேற்றுமையின்றி ஒன்றாக, எவ்விதமானபேதமும் இன்றி இருந்திடவே தேவனானவர் "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் **தேவனுடைய பிள்ளைகளாக** புத்திரராயிருக்கிறீர்கள். ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்த அத்தனைபேரும் கிறிஸ்துவைத் **தரித்துக்கொண்டீர்களே**, ஆதலால் நீங்கள்... அடிமையென்றும் சுயாதீனன் என்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை நீங்களெல்லாரும் **கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்**" (கலா.3:27-28) என பவுலடியார் கூறியுள்ளார். இவ்வாறே பேதுருவும், நாம் நமது பாவத்திலிருந்து மீட்கப்பட.... **அழிவுள்ள** வஸ்துக்களாகிய 'பொன்னினாலும், வெள்ளியினாலும் மீட்கப்படாமல், **குற்றமற்ற மாசற்ற** ஆட்டுக்குட்டியாகிய **கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று** அறிந்திருக்கிறீர்களே" என்றார். மேலும் 1பேது.1:18-19 (யோவா.1:29) 1யோவா.1:7 எபேசி.2:13-14 அவரைப்போலவே **ஜீவனுள்ள** கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் **இயேசுகிறிஸ்து** மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளை செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள் 1பேது.2:5-9. இதற்காகவே அவர் நம்மை இப்பாவஉலகில், பாவிகளாகவும், பிசாசுக்கு அடிமைகளாயிருந்த நம்மை... அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு (யோவா.8:12) வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் **தெரிந்துகொள்ளப்பட்ட** சந்ததியாயும் **ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும்** அவருக்குச் சொந்தமான

ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்கிறார். 1பேது.2:9. ஏனெனில் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த நாம் அனைவரும் "...ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக்கொண்டவர்களாயிருக்கிறபடியால் சுத்த **இருதயத்தோடே....** அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் **ஜீவனுள்ளதுமான** வித்தினாலே மறுபடியும் (முதல் பிறப்பு தாய், தந்தையினால் பிறந்தது. இரண்டாம் பிறப்பு சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து ஆவியினால் பிறக்கும் பிறப்பு தான் மறுபிறப்பு) ஜெநிப்பிக்கப்பட்டீர்களே" 1பேது.1:22,23. தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்ட சத்தியத்திற்கு கீழ்ப்படிந்தவர்கள் அனைவருமே தேவனுடைய பார்வையில் மிகவும் முக்கியமான **விசேஷித்தவர்களாவர்.**

இவ்வுலக வாழ்வில் நமக்கு பல போராட்டங்களும், உபத்திரவங்களும் 1பேது.4:14-16 (கொஞ்சக்காலம்) பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவதுடன் 2பேது.5:10 ஒருவேளை நாம் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் **பாக்கியவான்கள்,** ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையான ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார், அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; (அதேநேரத்தில்) உங்களாலே மகிமைப்படுகிறார்" (1பேது.4:14). நாம் அவருடைய பாடுகளுக்கு (நீங்கள்) பங்காளிகளானதால் சந்தோஷப்படுவதுடன் (1பேது.4:13). கிறிஸ்துவின் மகிமைக்காக அவரின் (சபைக்கு) மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்பு செய்யுங்கள்... பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது **மகிமையான வாடாத** "**கிரீடத்தை**" பெறுவோம் (1பேது.5:3,4). ஆகையால் நமது தெரிந்துகொள்ளுதலும், பரம அழைப்பும் நமக்கு மிகச் சிறந்த விசுவாச வாழ்வை அமைத்துதருகிறது. கிறிஸ்துவுக்குள் வாழ்கிற மேன்மையான வாழ்வு இப்படியிருக்க, இன்று உலகெங்குமுள்ள போதகர்களில் பெரும்பாலோர் தங்களின் வேத அறியாமையினாலும், வேதத்தை புரிந்துகொள்ளாததினாலும் தேவனால் மீட்கப்பட்டு கழுவப்பட்ட பரிசுத்தவான்களை பரமபாவிகள், குப்பைகள், அழுக்கான கந்தைகள், அற்ப பூச்சிகள், ஒன்றுக்கும் உதவாதவர்கள், பரதேசிகள் இன்னும் அனேக இழிவான வார்த்தைகளால் தங்களையும் மற்றவர்களையும் குறித்து தாழ்வு மனப்பான்மையுடன் பேசிவருகிறார்கள். அவர்களின் செய்திகளை கேட்கிற விசுவாசிகளும் தங்களின் பழைய, கற்கால வாழ்வை எண்ணி, எண்ணி அழுதுபுலம்பி, கூச்சலிட்டு கண்ணீர் விட்டு மன அமைதியற்று வாழகின்றார்கள். ஒரு பகுதியனரும், தாங்களும் தங்களின் சபையின் மக்கள் மட்டுமே பரிசுத்தர்கள், ஆகையால் தான் கர்த்தர் எங்களை ஆசீர்வதித்து வருகிறதால் ஆசீர்வாதமாக இவ்வுலகில் வாழ்கிறோம். நாங்கள் மட்டுமே பரலோகம் போக தகுதியுடையவர்கள் என்று இலவம் காத்தகிளியைப் போன்று ஏமாற்றப்பட்ட வாழ்வை நடத்தி வருகிறார்கள். வேறு ஒரு பதியினர் இவ்வாறான போதனை கேட்டவர்கள் கும்மாள மிட்டு, கூச்சலுடன் கூடிய அலங்கார ஆராதனைகள் உலகெங்கும் கடந்த 100 ஆண்டுகளாக விஷக்கிருமிகளைப் போல் பலமடங்கு மிகவேகமாய் பரம்பி பெருகிவருகிறது. மக்களும் தேவனுக்கு பிரியமான மக்களாய், தேவனுக்கு பிரியமான ஆராதனை நடத்திடாமல், அவரின் வாக்குத்தத்தை பின்பற்ற மறந்து தங்கள் தங்களின் ஆசீர்வாதத்தை, தேவமகிமையை இழந்தவர்களாய் தாங்கள் கேட்ட மனித உபதேசத்தை நம்பி பின்பற்றி வாழ்ந்துவருவது எவ்வளவு வேதனையான செயலாகும்!

நம்முடைய மறு பிறப்பான பரிசுத்தமான வாழ்வு கிறிஸ்துஇயேசுவின் **உபதேசத்தினால்தான்.** அவரின் உபதேசத்தில் **நிலைத்திருந்தால்** அவரும் நம்மில்

நிலைத்திருப்பார். அவர் வார்த்தை நம்மில் நிலைத்திருந்தால் நாம் ஜெபத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அது நமக்கு வாய்க்கும். தொடர்ந்து ஆவிக்குரிய நற்கிரியைகளை நாளும் நல்கிடஇயலும். அவரும் அவருடைய வார்த்தையும் நமக்குள் இல்லாவிட்டால் நம்மால் ஒன்றுமே செய்ய முடியாதே (யோவா.15). அவருடைய வார்த்தையில் நிலைக்கொண்டிருந்தால் **அவரின்** சந்தோஷம் நம்மில் என்றும் **நிலைத்திருக்கும்** உலகமளிக்கும் பாடு, உபத்திரவம் நம்மை ஒன்றுமே செய்யமுடியாது. பிலிப்பிய சபையார் உலக கவலைகளால் நிறைந்திருந்தபோது அவர்களால் சந்தோஷமாக இருக்க இயலவில்லை, ஆனால் சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டு சிறையில் அடைப்பட்டிருந்த பவுலடியார் தான் சந்தோஷமாய் இருந்ததோடு, பிலிப்பிய சபையாருக்காக எப்போதும் சந்தோஷத்தோடே விண்ணப்பம் செய்தார் பிலிப்.1:4,6 தேவனை ஸ்தோத்தரித்தார். மேலும் அவர்களெல்லாரும் கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் ஒன்றுக்கும் **கவலைப்படாதிருங்கள்**. உங்கள் தேவைகளெல்லாம் ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் **தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்** (பிலி.4:4-6) என்று ஆலோசனை கூறினார்.தேவன் அவனோடும், அவன் தேவனோடும் வாழ்ந்ததினால் அவரால் எல்லாவற்றையும் செய்யமுடிந்தது (4:13) துன்பத்திலும் எப்போதும் சந்தோஷத்துடன் வாழமுடிந்தது, மற்றவர்களை வாழ்த்த முடிந்தது.

அவன் சந்தோஷத்திற்கு காரணம் அன்றாடம் தேவனின் திருப்பணியை தயங்காமல், தவறால், துரிதமாய் செய்து வந்தார். சிறையில் இருந்த காலத்தில் சிறை காவலருக்கு சுவிசேஷத்தை அறிவித்து, ஆத்தும, ஆதாய பணியை நிறைவேற்றியதுடன் சிங்கத்தின் குகையில் அதன் பிடரியை பிடித்து வென்ற தீரமான வீரனைப்போன்று, பின் நாளில் தன்னை கொலை செய்யவிருக்கும் கொடூரன் **நீரோவின்** அரண்மனையில் உள்ளவர்களுக்கும் நற்செய்தியை கூறி அவர்களையும் நம்மைப்போல் மாற்றியதுடன், அவர்களனைவருக்கும் கிறிஸ்தவர்களின் மீது சிந்தை கொள்ளும்படியாக மாற்றினதினால் அவனுடன் வாழ்த்து கூறிவர்களின் நீண்ட பட்டியலில் குறிப்பிடும்போது" பிலிப்புபட்டணத்திலுள்ள "பரிசுத்தவான்கள் அனைவருக்கும் **விசேஷமாக** இராயனுடைய (நீரோ இராஜாவின்) **அரண்மனையிலுள்ளவர்களும்** உங்களுக்கு வாழ்த்துக்கள் சொல்லுகிறார்கள்" பிலி.4:22 என்றதை வாசிக்கும்போது, பவுலடியார் உண்மையாகவே தேவனுடைய பிள்ளையாக அவரிலும், அவர் வார்த்தையிலும் கடைசிமட்டும் நிலைத்திருந்து அநேகரை கர்த்தருக்குள் வழிநடத்தியது இன்றும் நமக்கு வியப்பிற்குரியதாகவே உள்ளது.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ அத்தனைபேர்களும் **தேவனுடைய பிள்ளைகளாகும்படி** அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" யோவா.1:12. இன்றும் தேவனுடைய பிள்ளையாய் மாறாமல் சாத்தானுக்கு உலகின் பாவத்திற்கு அடிமையாய் இருப்போரே இன்றே அவரை உம்முடைய பரலோக பிதாவாக ஏற்றுக்கொண்டு, அவர் உனக்காக வைத்திருககும் அவரின் அதிகாரத்தை பெற்று, பாவ அடிமைத்தனத்தினின்று விடுதலையாகி அவரின் **அரசக்குமாரனாக** மாறிடவேண்டாமா? 2கொரி.6:2 "தேவனால் உண்டாயிருந்து அவர்களை ஜெயித்தவர்களாவோமா? 1யோவா.4:4. ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் **பெரியவர்**. எபே.2:17-20; யோவான் 14:12; சங்.14:12; சங்.49:14.

சிறுவர் பகுதி

# முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்

**வேத பகுதி : அப்போஸ்தலர்9:1-20**



இந்த வாக்கியத்தை சொன்னவர் யார் என்று தெரியுமா? ஆண்டவராகிய இயேசு தான்! ஆம், அவர் சவுலைப் பார்த்து சொன்னார். ஒரு முறை சவுல் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும் படி பிரதான ஆசாரியரிடத் திற்குப் போய் நிருபங்களைக் கேட்டு வாங்கினான். பின்பு பிரயாணமாய்ப் போகும்போது தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது: அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது ; சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான் அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான் அதற்குக் கர்த்தர் : நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; **முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்** என்றார்.

அவனோ நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டான். அதற்குக் கர்த்தர் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அவனுடனே வந்தவர்கள் சத்தத்தைக் கேட்டு ஒருவரையும் காணாமல் பிரமித்து நின்றார்கள். சவுல் தரையிலிருந்தெழுந்து தன் கண்களைத் திறந்தபோது ஒருவரையும் காணவில்லை அப்பொழுது கைலாகு கொடுத்து அவனை நடத்தினார்கள். மூன்று நாள் பார்வையில்லாதவனாய் சாப்பிடாமல் இருந்தான். பின்பு அனனியா வரவும் அவன் கையைவைத்தவுடனே பார்வையடைந்து ஞானஸ்நானம் பெற்று தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று பிரசங்கித்தான். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா? கர்த்தருடைய மார்க்கத்தை எதிர்த்தவன் அவருக்கே ஊழியக்காரனாய் மாறினான். அவன் தான் அப்.பவுல்.

கிறிஸ்தவ மார்க்கத்தை அழிக்கவேண்டும் என்று நினைத்த சவுலை கர்த்தர் எப்படி சந்தித்தார் பார்த்தீர்களா? முள்ளில் உதைத்தால் யாருக்கு வலிக்கும்? உதைத்தவர்களுக்குத்தானே, அதைத்தான் கர்த்தர் முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

மனப்பாட வசனம்:

"ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்"...(2கொரிந்தியர்5:17)

# வேத அறிவுப் போட்டி எண்.110

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்

1. வார்க்கப்பட்ட கண்ணாடியைப்போல் கெட்டியான ஆகாய மண்டலங்களை நீர் அவரோடேகூட இருந்து விரித்தீரோ என்று கேட்டவன் யார்?
2. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களா?
3. யூதருக்குப் பயப்படுகிற பயம் தேசத்து ஜனங்களைப் பிடித்ததினால், அவர்களில் அநேகர் எம்மார்க்கத்தில் அமைந்தார்கள்?
4. முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் என்ன செய்யவேண்டும்?
5. யாருடைய நாட்களில் எங்கள் தேவனுடைய ஆலயத்தின் சகல வேலைக்கும், வருஷந்தோறும் நாங்கள் சேக்கலில் மூன்றில் ஒரு பங்கைக்கொடுப்போம் என்ற கடனை எங்கள்மேல் ஏற்றுக்கொண்டோம் என்றார்கள்?
6. கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க பவுல் புத்தி சொன்ன இருவர் யார்?
7. என் தேவனாகிய கர்த்தருடைய கரம் என்மேல் இருந்ததினால் நான் திடன்கொண்டேன் என்பவன் யார்?
8. தீகிக்கு என்பவன் உண்மையுள்ள ஊழியக்காரனா?
9. நான் என் தேவனுக்குத் துரோகம் பண்ணினதில்லை என்று சொல்லும் ராஜா யார்?
10. கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வோமா?

**Website: www.thewordofchristindia.com**

"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது"
பிலிப்பியர் 3:20

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi Press14/13/24 melamanthai street, Batlagundu - 624 202.
Editor: B.Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Oct .2009.

**BATLAGUNDU CHURCH OF CHRIST**
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in

Website: www.thewordofchristindia.com

ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள
யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

உங்கள் வானொலியில்

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு
சனி கிழமை மாலை 5.30 முதல் 5.45 மணி வரை கேளுங்கள் மேலும்
உங்கள் தொலைக்காட்சியில்
TAMILAN TV - Every Monday 6.00 - 6.15 a.m
IMAYAM TV - Every Wednesday 6.30 - 6.45 a.m

மாத இதழ் மற்றும் வேதபாடம்
தேவைக்கு உடனே ரூ.15/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

டிவி மற்றும் ரேடியோவில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய சிடி மற்றும்
டிவிடிக்கள் தேவைப்படுவோர் ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

அனைத்து
தொடர்புக்கும்

Monthly Magazine

To

*If undelivered please return to:*
From

Editor
THE WORD OF CHRIST
P.O.Box-5
Batlagundu - 624 202
S.INDIA.